Dominic Perrottet
Premier of New South Wales

Brad Hazzard
Minister for Health

MEDIA RELEASE

REISSUE

செவ்வாய்க்கிழமை, 25 சனவரி 2022

# சமூகப் பாதுகாப்பினைப் பராமரிப்பதற்கு கொவிட்-19 இன் ஒழுங்கு முறைகள் தொடர்ந்தும் அதே நிலையில் இருக்கும்

இயலுமான அளவு விரைவில் பாதுகாப்பாகப் பாடசாலைக்குத் திரும்புதல், மற்றும் தெரிவுசெய்யப்பட்ட அவசரமற்ற சத்திர சிகிச்சைகளை மீண்டும் ஆரம்பித்தல் ஆகியனவற்றைக் கவனத்தில்கொண்டு கொவிட் - 19 ஐக் கட்டுப்பாட்டில் வைத்திருப்பதற்கு அளவீட்டு முறையான எதிர் முறைமைகளை அரசு மேற்கொண்டிருப்பதால் நியூ சவுத்வேல்ஸ் அரசாங்கம் தற்போதுள்ள கட்டுப்பாடுகளை ஒரு மாதத்திற்கு நீடிக்கும்.

பின்வருவனவற்றை உள்ளடக்கிய தற்போதைய ஒழுங்குமுறைகள் 2022 சனவரி 27 வியாழக்கிழமை முதல் 2022 பெப்பிரவரி 28 திங்கட்கிழமை வரை தொடர்ந்திருக்கும்:

- பொது மது அருந்தும் இடங்கள், கேளிக்கை விடுதிகள், உணவகங்கள், இரவுக் களியாட்ட விடுதிகள் ஆகியன உள்ளடக்கிய விருந்தோம்பல் நிகழ்விடங்களின் உள்ளரங்குகளில் ஒருவர் இரண்டு சதுர மீற்றர் இடைவெளியில் இருப்பதைக் கடைப்பிடிக்கவேண்டும்.

- (வசிப்பிடத்தைத் தவிர) எல்லா உள்ளரங்குகளிலும் முகக் கவசங்கள் தேவைப்படும். மற்றவர்களிடமிருந்து பாதுகாப்பான தூரத்தை உங்களால் கடைப்பிடிக்க முடியாவிட்டால் முகக் கவசங்கள் பயன்படுத்துதல் பெரிதும் ஊக்கப்படுத்தப்படுகின்றது.

- விருந்தோம்பல் நிகழ்விடங்கள் மற்றும் சில்லறை வியாபாரக் கடைகள் ஆகியன உள்ளடக்கிய சில வளாகங்களுக்கு உட்செல்ல கியூ ஆர் குறியீடு (QR Code) மூலம் வருகையைப் பதிவுசெய்தல் கட்டாயமாகும்.

- விருந்தோம்பல் நிகழ்விடங்கள், களியாட்ட வசதிகள், இரவுக் களியாட்ட விடுதிகள் ஆகியவை அடங்கிய உள்ளக இசைவிழாக்கள், உள்ளகப் பெரும் பொழுதுபோக்கு

வசதிகள் ஆகியவற்றில் பாடுதலும் நடனமாடுதலும் அனுமதிக்கப்படமாட்டா. (திருமணங்கள், நிகழ்ச்சிகளை வழங்குபவர்கள், கற்பிப்போர் மற்றும் மாணவர்கள் ஆகியோர் விலக்களிக்கப்பட்டுள்ளவையாகும்).

இந்த நடவடிக்கைகளை மீண்டும் கடைப்பிடித்தல் சமூகத்தையும் எங்கள் சுகாதார விதிமுறைகளையும் தொடர்ந்தும் காப்பாற்றும் என்று மாநில முதல்வர் டொமினிக் பெறோரெற் கூறினார்.

''எங்கள் முன் என்ன உள்ளதோ அதற்கான அணுகுமுறைகளை ஏற்ற முறையில் எதிர்கொள்வோம் என்று எப்பொழுதும் கூறிவந்துள்ளோம். சரியாக அதன்படியே நாங்கள் செய்கின்றோம்'' என்று திரு.பெறோரெற் கூறினார்.

''கோவிற்றுடன் வாழ்வதற்கு நாங்கள் மாற்றம் அடைந்துகொண்டிருக்கின்றோம். மக்களைப் பாதுகாப்பாக வைத்திருக்கின்றோம் என்பதனையும் மற்றும் எங்கள் விதிமுறைகளையும் பாதுகாக்கின்றோம் என்பதனையும் உறுதிப்படுத்துவதற்கும் அணுகு முறைகளைத் தொடர்ந்து நவீனமயமாக ஆக்கிக்கொண்டிருக்கவேண்டிய தேவை உள்ளது.''

''அத்துடன் எங்கு இயலுமோ அங்கு வீட்டிலிருந்து தொடர்ந்தும் வேலைசெய்ய மக்கள் ஊக்குவிக்கப்படுவது மற்றும் உணவுகொள்ளும் பொழுதும் பானங்கள் அருந்தும் பொழுதும் ஆட்களோடு ஒன்று கூடுவதைக் குறைத்துக்கொள்ளுதல் ஆகியனவற்றை மேலதிக நடவடிக்கையாகக் கொள்ளவேண்டும்.''

நியூ சவுத் வேல்ஸ் சுகாதார ஊசேற்றும் மருத்துவ நிலையங்களில் பெருமளவிலானதும் கிடைக்கக்கூடியதுமாக உள்ளதுமான மேம்படுத்தும் தடுப்பூசியைப் (Booster) போட்டுக்கொள்வதற்குத் தகுதிபெற்றுள்ளவர்கள் அதற்கு, இயலுமானவரை விரைவில் முன்பதிவு செய்தல்வேண்டும் என்று சுகாதார அமைச்சர் பிராட் ஹஸாட் கூறினார்.

''தங்களின் இரண்டாவது தடுப்பூசிக்கும் மேம்படுத்தும் ஊசிக்குமான தற்போதைய இடைவெளி மூன்று மாதங்கள் மாத்திரமே, எனவே காலத்தை வீணாக்காதீர்கள் - நாங்கள் எவ்வளவு விரைவில் மேம்படுத்தும் ஊசியை எடுத்துக்கொள்கிறோமோ அப்பொழுது ஒமிகுரோன் அலையை நாங்கள் முறியடிப்போம்.'' என்று திரு. ஹஸாட் கூறினார்.

கோவிட் தடுப்பூசிகளின் முதல் இரண்டு தடுப்பூசிகளைப் போட்டுக்கொள்வதில் நியூ சவுத் வேல்ஸ் சமூகம் அசாதாரண முயற்சியெடுத்துத் தடுப்பூசி எடுத்துக்கொண்டவர்களில் உலகளாவிய அளவில் மிகச் சிறந்த அளவிலான மக்களாக ஏற்படுத்திக்கொண்டது. அதற்கமைய மிகவும் தொற்றிப் பரவக்கூடிய ஒமிகுரோன் வலுவிற்கு எதிராக உங்கள் பாதுகாப்பினை உயர்த்திக்கொள்வதற்கு மேம்படுத்தும் ஊசியை போட்டு அத்தகைமையை

மேம்படுத்துதல் மிகவும் முக்கியமானதாகும்.”

18 வயதினரும் அதற்கும் மேற்பட்ட வயதுடையவருமான மக்கள் கொவிட் - 19 இற்கான எந்தத் தடுப்பூசியையும் எடுத்துக்கொண்ட மூன்று மாதங்களில் தங்களின் மேம்படுத்தும் ஊசியை எடுத்துக்கொள்ளலாம். தங்களின் கொவிட் - 19 தடுப்புசிகளை அல்லது மேம்படுத்தும் ஊசியை www.nsw.gov.au/covid-19/vaccination/get-vaccinated என்பதன் ஊடாக முன்பதிவு செய்யலாம்.

மேலதிக தகவல்கள் கிடைக்கும் இடம்:: nsw.gov.au

ஊடகம்: இயன் பீற்றசன் / மாநில முதல்வர் / 0438 748 501

நிக்கோலெற் கோமெண்டி/அமைச்சர் ஹஸாட் /0429 064 897